# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE (FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.

## DEPOSITION OF WITNESS

OS.NO. - 54/2016
P.W.1 - ஜம்சாத் பேகம் க/பெ.அப்துல் ரசாக்
DATE - 19.06.2023.

**வா.சா.1 மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் 1, 3, மற்றும் 4 தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி.**

என் கணவர் அப்துல் ரசாக் என்பவருடன் திருமணத்திற்கு முன்னர் எனக்கு எப்படி பழக்கம் என்றால் அப்துல் ரசாக் எங்கள் உறவினர் மூலம் என்னை திருமணம் செய்து கொள்ள விருப்பபடுவதாக சொன்னதன் பேரில் எங்கள் திருமணம் நடைபெற்றது. என் கணவர் அப்துல் ரசாக் முஸ்லீம் மதத்தில் தீவிர ஈடுபாடு கொண்டவர் என்றால் சரி தான். எனக்கு அப்துல் ரசாக்குடன் வாணியம்பாடியில் திருமணம் நடைபெற்றது என்றால் சரி தான். அப்துல் ரசாக்கிற்கு என்னுடன் திருமணம் ஆன போது வாணியம்பாடியிலோ, ஆம்பூரிலோ, பேரணம்பட்டிலோ குடியிருக்கும் வீடு எதுவும் இல்லை என்றால் சரி தான். அப்துல் ரசாக்குடன் எனக்கு திருமணம் ஆன உடன் எந்த வீட்டிற்குசென்றேன் என்றால் வாணியம்பாடியில் உள்ள டேனரியில் மாடியில் உள்ள குடியிருப்பு பகுதியில் இருந்தோம். அந்த டேனரி முதல் பிரதிவாதிக்கு சொந்தமானது என்றால் சரி தான். அதன் பிறகு சென்னையில் உள்ள பெரியமேட்டில் உள்ள வீட்டிற்கு சென்று விட்டேன் என்றால் சரி தான். திருமணம் அன 10 - 15 நாட்களில் அங்கு சென்றோம். அப்துல் ரசாக் இறக்கும் வரை எந்த வீட்டில் இருந்தார் என்றால் சென்னையில் உள்ள வீட்டில் தான் இருந்தார். சென்னை பெரிய மேட்டில் உள்ள வீட்டில் வேறு யார் யார் இருந்தார்கள் என்றால் முதல் பிரதிவாதி, அவரின் மனைவி மற்றும் குழந்தைகளுடன் இருந்தார். வழக்கில் குறிப்பிட்டுள்ள 2 முதல் 4 பிரதிவாதிகள் யார் என்றால் அப்துல் ரசாக்கின் மகள்கள். அஜிரா நஸ்ரீன் எங்கு உள்ளார் என்றால் சென்னை கீழ்ப்பாக்கத்தில் உள்ளார். யாஸ்மீன் எங்கு உள்ளார்

என்றால் சென்னை, திருவல்லிகேணியில் உள்ளார். அஸ்பியா எங்கு உள்ளார் என்றால் பெங்களூரில் உள்ளார். ஆனால் தாவாவிலும் வழக்கிற்கு முன்னர் அனுப்பிய அறிவிப்பிலும் 2 முதல் 4 பிரதிவாதிகள் சென்னை பெரிய மேட்டில் உள்ள வீட்டில் இருந்ததாக குறிப்பிட்டுள்ளது தவறு தான் என்றால் சரி தான். அப்துல் ரசாக்கிற்கு ஆங்கிலம் மற்றும் உருது மட்டும் தான் தெரியும் என்றால் இல்லை. தமிழும் தெரியும். அப்துல் ரசாக் ஆங்கிலம், உருது மற்றும் தமிழ் ஆகிய மொழிகளில் பேசுவார் என்றாலும் ஆனால் ஆங்கிலம் மற்றும் உருதுவில் மட்டும் தான் எழுத தெரியும் என்றால் அது குறித்து எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. பெங்களூரில் உள்ள அப்துல் ரசாக்கின் நண்பர் சாஜஹுதின் என்பவர் அப்துல் ரசாக்கை வந்து சந்தித்தார் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. அப்துல் ரசாகின் கையொப்பத்தை என்னால் அடையாளம் காட்ட முடியுமா என்றால் முடியும். தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 ஆவணத்தில் உள்ள கையொப்பம் அவருடையதா என்றால் ஆமாம். அப்துல் ரசாக் வீட்டில் நான் திருமணம் ஆகி போன போது ஒரே சமையல் அறை இருந்ததா என்றால் ஆமாம். அப்துல் ரசாக் அவருடைய முதல் மகனுடன் இருந்தார். நான் அப்துல் ரசாக்குடன் திருமணம் ஆகி சென்ற போது அவருக்கு எத்தனை சொத்துகள் இருந்தது என்றால் பெரியமேட்டில் சுமார் 17 வாடகைதாரர்கள் உள்ள கட்டிடம் இருந்தது. மண்டி இருந்தது. அந்த மண்டி நான் சொன்ன காம்ப்ளக்சில் இருந்ததா என்றால் ஆமாம். அந்த காம்ப்ளக்ஸ் இல்லாமல் வீடு தனியாக இருந்ததா என்றால் ஆமாம். பேரணாம்பட்டில் ஒரு டேனரி இருந்தது. அப்துல் ரசாக்கிற்கு என்னுடன் திருமணம் ஆன போது என்ன வயது இருக்கும் என்றால் 67 வயது இருக்கும். அப்துல் ரசாக் சென்னை தவிர வேறு எங்கும் செல்ல மாட்டார் என்றால் சென்னையில் தான் இருப்பார். பெங்களூருக்கும் செல்வார். பெங்களூருக்கு எதற்கு செல்வார் என்றால் அங்குள்ள உறவினர்கள் வீட்டிற்கு செல்வார். எனக்கு திருமணம் ஆன போது முதல் பிரதிவாதி எத்தனை டேனரிகள் வைத்துள்ளார் என்றால் பேரணாம்பட்டு, வாணியம்பாடி ஆகிய இடங்களில் டேனரி வைத்திருந்தார். அந்த டேனரிக்கு தேவையான பொருட்களை முதல் பிரதிவாதி தான் வாங்கி வந்தார் என்றால் அவர் மட்டும் இல்லை, அப்துல் ரசாக்கும் வாங்கி வருவார். டேனரிக்கு தேவையான மூலப்பொருட்களை

எங்கிருந்து வாங்கி வருவார்கள் என்றால் சென்னையில் இருந்து வாங்கி வருவார். டேனரிக்கு தேவையான மூலப்பொருட்களை கேரளா, பாம்பே, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் மட்டும் தான் வாங்கி வருவார்கள் சென்னையில் முலப்பொருட்கள் கிடைக்காது என்றாலும் அந்த பொருட்களை முதல் பிரதிவாதி தான் சென்று வாங்கி வருவார் என்றால் சரியல்ல. டேனரி நடத்துவதற்கு தேவையான பொருடகள் என்ன என்ன என்று எனக்கு தெரியுமா என்றால் நான் 15 வருடங்களாக டேனரிக்கு செல்லவில்லை என்பதால் எனக்கு ஞாபகம் இல்லை. பேக்டரியில் என்ன என்ன மெஷின்கள் உள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால் எனக்கு ஞாபகம்இல்லை. நான் எத்தனை ஐயிட்ட சொத்துகளுக்காக இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் 2 ஐயிட்ட சொத்துகள். அந்த சொத்துக்களுக்கான சர்வே எண்கள் தெரியுமா என்றால் தெரியும், அவை 400 மற்றும் 386. சர்வே எண் 400ல் மொத்தம் எவ்வளவு விஸ்திரணம் உள்ளது அதில் என்ன டேனரி உள்ளது என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. சர்வே எண் 386ல் மொத்தம் எவ்வளவு விஸ்திரணம் உள்ளது அதில் என்ன டேனரி உள்ளது என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. எந்தெந்த பெயரில டேனரிகள் இயங்கி வருகிறது என்றால் நாசர் டிரேடர்ஸ் மற்றொரு பெயர் உள்ளது. அது எனக்கு தற்போது ஞாபகம் இல்லை. அந்த டேனரிகள் எங்குள்ளது என்றால் பேரணாம்பட்டில் இருந்து வி.கோட்டா செல்லும் சாலையில் உள்ளது. அந்த டேனரி எந்த பக்கத்தில் உள்ளது என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. நாசர் டிரேடர்சில் என்ன உற்பத்தி செய்யப்படுகிறது என்றால் ஷூக்கள் உள் வைக்கும் பொருட்கள் தயாரிக்கிறார்கள். எந்த தோலில் அந்த பொருட்கள் செய்கிறார்கள் என்றால் மாட்டு தோலில் செய்கிறார்கள். எருமை மாட்டு தோலில் தான் ஷூவின் அடிப்பாகம் தயாரிக்கப்படுகிறது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தோல் வாங்கி வந்து ஷூவின் அடிப்பாகம் தயாாரிப்பதற்கு எவ்வளவு நாட்கள் ஆகும் என்று எனக்கு தெரியுமா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. ஆயிஷா குளு என்ற டேனரியில் எந்த பொருள் தயாரிக்கப்படுகிறது என்று எனக்கு தெரியுமா என்றால் பல வருடங்கள் ஆகிவிட்டதால் எனக்கு ஞாபகம் இல்லை. இரண்டு டேனரிகளையும் அப்துல் ரசாக் உயிருடன் இருக்கும் காலத்தில் இருந்தே முதல் பிரதிவாதி தான் நடத்தி வருகிறார் என்றால் இல்லை.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி வழக்கறிஞரின் கோரிக்கையின் பேரில் ஒத்தி வைக்கப்படுகிறது.

P REVATHY Digitally signed by P REVATHY

**Additional District Judge (FTC),**

**Vellore.**